O.S No. 125/2014 (P.W–1)

திரு. பழனிசாமி

01.08.2022

குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் என்னுடைய இடத்தில் பிரதிவாதி 1/2 அடி உள்ளே வந்துவிட்டார் அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பூமியின் காலை எண் தெரியுமா என்று கேட்டால் தெரியாது ஆனால் அதன் சைட் எண்.9 ஆகும். சைட் எண்.9 ன் நீளம் அகலம் தெரியுமா என்று கேட்டால் நீளம் 71 அடி, அகலம் 18 1/2 அடி ஆகும். சைட் எண்.9 க்கு மேல்புறம் பாதியை தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். சைட் எண்.9 ன் கிழபுற பகுதியை யார் வாங்கியுள்ளார் என்று கேட்டால் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி கிரையம் வாங்கியுள்ளார். சைட் எண்.9 ன் கிழமேல் அடி வடபுறமும் தென்புறமும் 35 அடி என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற மேல்புற பகுதிக்கு கிழக்கே இருந்த பாக்கியுள்ள இடம் ராமசாமிக்கு பாத்தியம் என்றால் சரிதான். நான் 1995 ல் கிரையம் வாங்கினேன். ராமசாமி எப்போது கிரையம் பெற்றார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. ராமசாமியின் மகன்தான் இவ்வழக்கின் பிரதிவாதி நடராஜ் என்றால் சரிதான். ராமசாமி தான் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டினார் என்றால் சரிதான்.ராமசாமி தன்னுடைய மகனுக்கு வீட்டையும் இடத்தையும் தானசெட்டில்மெண்ட் 2008 ம் வருடத்தில் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

2) ராமசாமி வடபுறத்தில் கான்கிரீட் வீடும், தென்புறத்தில் ஓட்டு விடும் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த ஓட்டு வீடு 11 அடி அகலும், 35 அடி நீளமும் கொண்டது என்றால் சரிதான். ராமசாமி வடபுறமாக கட்டியுள்ள கான்கீரிட் வீடு 16 அடி அகலும், 20 அடி நீளமும் கொண்டது என்றால் சரிதான். ராமசாமி கிரையம் பெற்ற 2,3 ஆண்டுகள் கழித்து மேற்கண்ட வீடுகளை கட்டினார் என்றால் சரிதான். என்னுடைய இடத்திற்கு மேல்புறத்திலுள்ள வீடு யார் வீடு என்று கேட்டால் திருமூர்த்தி என்பவரின் வீடாகும். திருமூர்த்தியின் வீட்டிற்கு மேல்புறத்தில் உள்ள இடத்தை தங்கவேல் என்பவர் சமீபத்தில் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தங்கவேல் கிரையம் வாங்கும் போது நிலத்தை அளந்து வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. அவ்வாறு அளக்கும் போது அவர் கிரையம் பெறும் இடத்திற்கு கிழபுறமுள்ள திருமூர்த்தி தன்னுடைய இடத்திற்கு கிழபுறமாக உள்ள இடத்தில் ஒரு அடி சேர்த்து வீடு கட்டியுள்ள விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் அது எனக்கு தெரியாது.

இந்த வழக்கை 2014 ம் வருடத்தில் தாக்கல் செய்தேன்.

3) இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னுடைய வீட்டிற்கு கிழபுறம் ஒரு குளியலறை கட்டினேன் என்றால் சரிதான். நடராஜன் என்பவரின் வீட்டை ஓட்டி கட்டியதால் அவர் ஆட்சேபனை செய்ததன் பேரில் என் பாத்ரூமின் கிழபுற சுவரை எடுத்து விட்டு கிழபுறத்தை தகரம் வைத்து மறைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் தகரம் வைத்து மறைத்திற்கும் இடத்திற்கும் நடராஜன் வீட்டிற்கும் இடையே 3/4 அடி இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். அந்த பாத்ரூம் கட்டிய போது எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையால்தான் இந்த வழக்கு நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் கேட் வடகிழக்கு மூலையில் வைத்துள்ளேன் என்றால் சரிதான். நடராஜ் என்பவரின் மேல்புற சுவரை ஓட்டி என்னுடைய வடக்கு பார்த்த கேட் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

4) என்னுடைய இடத்தில் 1/2 அடி ஆக்கிரமித்து தள்ளி கேட் வைத்திருப்பதாகவும், அதனை தள்ளி வைக்குமாறு பிரதிவாதி சொன்னார் என்றால் சரிதான். பிரதிவாதியின் அப்பா வீடு கட்டும் போது தென்புறமுள்ள ஓட்டு வீட்டிற்கு மேல்புரமாக 1 அடி காலியிடம் விட்டு வடபுரம் உள்ள கான்கீரிட் வீட்டிற்கு மேல்புறமாக 1/2 அடி அகல இடைவெளி விட்டுதான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அளவுகள் தவறாக உள்ளது என்று நீதிமன்ற ஆணையரையும், நிலஅளவயரையும் அழைத்து சென்று அளந்து பார்க்கவில்லை. பிரதிவாதி என்னுடைய இடத்தில் வந்து பிரதிவாதியின் வீட்டிற்கு வர்ணம் பூசினார் என்று சொல்லுவது தவறு என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் பிரதிவாதி நடந்து கொள்ளவில்லை என்றும், வழக்கிற்காக நான் அவ்வாறு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் இடத்தில் 1/2 அடி ஆக்கிரமித்து கேட் வைத்துள்ளதாலும், பாத்ரூம் சுவர் 1/2 அடி ஆக்கிரமித்து நான் கட்ட முயற்சி செய்ததை பிரதிவாதி தடுத்துவிட்டதாகவும், அவர் மீது பொய் வழக்கு போட்டும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

(ஒம்)/- எஸ்.வடிவேல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.